**நாள் – 27.08.2024 CC.268/2021**

**அ.சா.2 சதீஷ்குமார், த–பெ அழகர்**

**கு.ப.ம.எண். 2718/2023 , நாள் 08.08.2023 மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் அ.சா.2 இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் முதுகலை ஆசிரியராக திருக்காட்டுப்பள்ளி சர். சிவசாமி அய்யர் மேல்நிலைப்பள்ளியில் பணியாற்றி வருகின்றேன். எனது பள்ளி சரியாக காலை 9.10மணிக்கு துவங்கும். அ.சா.1 மீனா எனது மனைவியின் சகோதரி என்றால் சரிதான். விபத்து சமயத்தில் ஒரு கார் வந்ததாக எனது விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கும் எனது பள்ளிக்கும் இடையே சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் இருக்கும்.

2) விபத்து நடந்தபோது நான் பணியில் இருந்தேன் என்றால் இல்லை, அன்று பள்ளி விடுமுறை ஆகும். நான் விபத்தை பார்க்கவில்லை, என்றும், விபத்து முடிந்த பின்புதான் நான் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரியல்ல. விபத்தை கார் இடிக்கவில்லை டாடா ஏசிதான் இடித்தது, நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. இழப்பீடு பெறுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கும், எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.